# 41

## பதம்

இது வடசொல்லன்று. பகுதலின் மரூஉவாகிய பதல் என்பதன் அடியாகிய பது, அம்முச்சாரியை பெற்றுத் தகரத்தொகுத்தல் உற்றது. பதம் சிறப்பாய் உயர்பதத்தைக் குறிக்கும் - ஒரு நிலையினின்று மற்றொரு நிலையடைந்த ஒன்றையும் குறிக்கும். பதம் சோற்றுக்கும் பெயர். சோறு நிலைதிரிந்ததன்றோ. மற்றும் இடம் இன்பம் முதலியவைகளைக் குறிக்கும்போதும் இவ்வாறே காரணம் அறியப்படும். எனவே பதம் தூய தமிழ்க் காரணப் பெயர்.

இதை வடவர் தமிழினின்று எடுத்தாண்டனர்.

## கலசம்

கலயம் என்ற தமிழ்ச்சொல் கலசம் என வடவரால் திரிக்கப் பட்டது. எனவே கலயம் என்பதினின்று கலசம் தோன்றியது.

கல்+அகம் = கல்லகம். இதன் மரூஉ கலம். கல்+அகடு கலடு. கன்னிலம் ஆனது நோக்குக. கலம் இடையகரம் பெற்றுக் கலயம் ஆனது. கல்லைக் குழிவு செய்தது கலம், கலயம் என்று காரணம் கண்டுகொள்க. குழிசி கல்லைக் குழிவு செய்தது என்ற இடத்துப் போல, கல்லை என்பதும் கல்லியது என்ற பொருளில் அமைந்ததே ஆகும். வடவர் திரித்ததால் நாம் அதை மேற்கொள்ள வேண்டா. கலயம், கலம் என்றே எழுதுக.

## குண்டம்

தூய தமிழ்க் காரணப்பெயரே; தமிழினின்று வடவர் எடுத் தாண்டனர்; ஓமகுண்டம் என்பதில் காண்க.

குண்டு - குளம் அதுபோல அமைந்தது; குண்டை - குண்டு சட்டி, குண்டான், குண்டம்! குண்டம் - ஆழக் கல்லிய இடம்.

- குயில், 31.3.59

# 42

## சூது

இது வடசொல் அன்று. தூயதமிழ்க் காரணப் பெயர். சூழ் வினை முதனிலை, தல் என்ற தொழில் இறுதிநிலை பெற்றுச் சூழ்தல் என்றும், அல் என்ற தொழில் இறுதிநிலை பெற்றுச் சூழல் என்றும், வு என்ற தொழிலிறுதி நிலைபெற்றுச் சூழ்வு என்றும், து என்ற தொழிலிறுதி நிலை பெற்றுச் சூழ்து என்றும் வரும். எனினும் சூழ்தல், சூழல், சூழ்வு, சூழ்து அனைத்தும் பொருளால் ஒன்றே. சூழ்து - விரகு (உபாயம் என்பர் வட சொல்லார்) சூது: இடைக்குறை. எனவே சூது விரகால் பிறர் பொருள் பறித்தல் என்பது. சூது, அம்சாரியைப் பெற்றுச் சூதம் எனவும் வருவதுண்டு. குன்று குன்றம், மன்று மன்றம் என்பவற்றிற் போல.

இனிச் சூழ்து என்பது சூது என இடையிலுள்ள 'ழ்' இல்லா தொழிந்தது எப்படி எனில், அது இடைக்குறை என்னும் தமிழிலக்கணம். போழ்து என்பது போது என்று ஆனது போல.

எனவே சூது தூய தமிழ்க் காரணப் பெயர். வடநூலில் வரும் 'த்யூத்' என்பதன் திரிபல்லவா சூது என்று கேட்பது முடிச்சுமாறித்தனம் என விடுக்க.

## விஞ்சை

இதை விந்த்யா என்பதன் திரிபு என்பார் தமிழறியார். விஞ்சுதல் (மிஞ்சுதல்) என்ற சொல் தமிழில் தான் உண்டு. வித்யா என்பதோ விந்த்யா என்பதோ விஞ்சை என வராது; வரத் தேவையுமில்லை.

விஞ்சுதல், விஞ்சை, விஞ்சு என்பவை முதனிலையாகக் கொண்ட தொழிற் பெயர்களே. பொருளும் ஒன்றுதான்.

## சடை

இதைப் பலர் ஜடை என்று கூறி இழுக்குவர். இது மட்டுமன்று. அவர்கள் சகரத்தையெல்லாம் 'ஜ' என்றே வாய்படுத்து மகிழ்ந்து

கொள்வர். இது பிழை என்பதும், மானக்கேடான செயல் என்பதும் அவர் அறியார். இந்தப் பிழையுணர்ச்சி எங்கிருந்து தோன்றியது எனில், சடை என்பது ஜடா என்ற வடசொல்லின் சிதைவென்று கூறித் திரியும் ஆரியச் சார்பினரிடமிருந்தே என அறிதல் வேண்டும்.

சடை தூய தமிழ்க் காரணப் பெயர். திரித்துவிட்ட தலை மயிரைக் குறிக்கும் சடை என்ற இச்சொல், முதலில் ஆலின் விழுதையும், வேரையும் குறித்தது. இது பின்னர் விழுது, வேர், போன்றதான மயிர்த்திரிக்கு உவமை ஆகு பெயராயிற்று. வடசொல் அன்று. வடநூற்களில் அச்சொல் உள்ளதே எனின் தமிழினின்று எடுத்தாண்டனர் எனத் துணிக.

**- குயில், 7.4.59**

## 43

## மேதை

இதை வடசொல்லா, தமிழ்ச் சொல்லா என்று கேட்கின்றார் ஒரு புலவர். அவர் பெயரை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. காரணம் அச்சம் போலும்!

மேதை மட்டுமன்று; மேதாவி, மேது, மேதகு, மேதகை இவை அனைத்தும் தூய தமிழ்க் காரணப் பெயர்களே.

மேதக்க சோழவளநாடு என்பதில், மேதக்க என்பதை நோக்குக: இதில் மேன்மை என்பதன் அடியாகிய மே என்பதை ஊன்றி அறிவார்க்கு, இச்சொற்கள் அனைத்தும் வடவருடையன அல்ல என்பதை அறிந்து கொள்வது எளிதாகும்.

மீ என்பது மீது என வந்ததுபோல, மே என்பது மேது எனவந்து, மேன்மையை விளக்கியது காண்க! மேதை என்பதில் ஐ பெயர் இறுதிநிலை: ஒருமைக்குரியது. மேதகு மேன்மைத் தகுதி உடைமை. எனவே இவை தூய தமிழ்க் காரணப் பெயர்கள் என்று தெளிக.

### கம்பலம் — கம்பளம்

இது தூய தமிழ்க் காரணப் பெயர். விளக்கிக் காட்டி, படிப்போருக்குத் தமிழின் தொன்மை உணர்த்தப்படும்.

**செந்நெ ருப்புணும் செவ்வெ லிம்மயிர்**

**அந்நெருப் பளவு ஆய்ப்பொற் கம்பலம்**

இச் சீவகசிந்தாமணி மேற்கோளை (2686) நுணுகி ஆராய்ந்தால் செவ்வெலி மயிர்கொண்டு நெய்ததே கம்பலம் - கம்பளம் என விளங்கும்.

இவ்வடிகட்கு நெருப்பைத் தின்னும் எலிமயிர்க் கம்பலம் என்று நச்சினார்க்கினியார் பொருள் கொண்டது பொருந்தாது. செந்நிறம் ஏறிய

எலி மயிர் என்பதே அதன் பொருளாகும்.

இனி முதலாவதாகக் கம்பலம் என்னும் சொல் எதனின்று தோன்றியது என்பது ஆராயப்பட வேண்டும். சொல்லாராய்ச்சி இல்லாதவர் இதனை ஒரு வடசொல் என்று கூறிவிடுவர். அவ்வாறா னால் வடமொழியில் அதற்குப் பொருத்தமான அடிச்சொல் கூற முடியுமா? வாசகுப் பத்தியம் முதலிய அகரவரிசை நூலோர், ஆசைப்படுதல் என்னும் பொருளுள்ள 'கம்' என்ற அடியினின்று இது பிறந்தது என்பர். அது பொருந்தாது. அன்றியும் கம்பலம் என்ற சொல், கிரேக்கர், இலத்தீனியம், பழைய ஆங்கிலம் முதலிய பிற ஆரியமொழிகளுள்ளும் இல்லை. வடமொழியில் இச்சொல் ஒருவகை மானின் பெயராய் வழங்குவதுண்டு. கம்பளி என்னும் சொல்லுருவம் காலத்தால் மிக முற்பட்டது என்று மோனியர் உ.வில்லியம்சு, தம் அகரவரிசை நூலில் கூறியுள்ளதும் நினைவிற் கொள்ளத்தக்கதாகும். அவர் சொல்லியபடியே காலத்தால் முற்பட்ட நாகரிகம் வாய்ந்த தமிழில் இக் கம்பலம் ஆடு என்று கூறிற்றுப் பிங்கலந்தை.

மேழகம் கம்பளம் தகரே திண்ணகம்
ஏழகம் கடாதுரு ஆட்டின் ஏறே

*- (8-2482) என்பதால் அறிக!*

இதனால் கம்பலம் - கம்பளம் ஆட்டின் பெயர்.

இனி, எலி மயிர் என்று வந்துள்ளதை ஆட்டு மயிரால் அன்றோ ஆனது கம்பளம் என ஐயுறுவர். எலி மயிர் என்பதில் உள்ள எலி என்ற சொல் ஆடு என்பதே என்பதை மேஷம் என்பதுபற்றி விளக்கும் போது விளக்கப்படும்.*

- குயில், **14.4.1959**

---

* தொடர் எண் 45இல் இதுபற்றி விளக்கப்படவில்லை

## 44

### அவிசு

அவிசு, அவிது, அவிதல் ஒரே பொருளில் அமைந்த தொழிற் பெயர்கள். சு, து, தல் தொழிற் பெயர் இறுதி நிலைகள். வேகவைத்தல் என்பது பொருள். இது அவி என முதனிலைத் தொழிற் பெயராகவே நிற்பதும் உண்டு.

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்ற குறட்பாவில் நோக்குக!

அவிசு, அவிது, அவிதல், அவி இவை தொழிலாகு பெயராய், அவிக்கப் போகும் ஆடுமாடுகளின் தசையையும் அவித்த, அதாவது வெண்ணெயை அவித்த - வேகவைத்த- காய்ச்சிய நெய்யையும் குறிக்கும்.

வேள்வியின் பெயரால் ஆடுமாடுகளைப் தீயிலிட்டு வேக வைத்துத் தின்னும் ஆரியர், இத்தமிழ்ச் சொல்லை எடுத்தாண்டனர். அவர் அவிஸ் என வாயாடுவர். எனவே அவி, அவிசு தூய தமிழ்க் காரணப் பெயர்கள்.

### அவை, சவை

அவை என்னும் தூய தமிழ்க் காரணப்பெயர். ஆரியரால் சவை, சபை, சபா என்றெல்லாம் வாயாட்டுப் பெற்றது. பெறவே இடைக் காலத்தில் அவை வேறு, சபை வேறு என்று ஆக்கப்பட்டது.

அவை சவை குழாம்விற் பந்நார்
அஃறிணைப் பன்மைச் சுட்டாம்
சவைவீடு அம்பலம் தக்கோரின்
சமூகம்பண் டிதன் சூது என்ப.

என்னும் நாநார்த்த தீபிகை (902) யிற் காண்க.

அவ்வுதல் என்பதும் அவ்வை என்பதும் தொழிற் பெயர்களே. அழுந்துதல், வீழ்தல் என்பன இவற்றின் பொருள். மனம் நன்னெறிக் கண் அழுந்துதல், வீழ்தல் என்று பொருள் கொள்க. வீழ்தல் - மனஞ் செலுத்தல், மனம் ஆழ்தல் என்க!

வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி என்ற குறட்பாவில் நோக்குக.

அவ்வை என்பது வகரத் தொகுத்தல் பெற்று அவை என ஆயிற்று.

எனவே அவை தூய தமிழ்க் காரணப் பெயராதல் காண்க.

இனி அவையினின்று தோன்றிய சவை, சபை, சபா என்பன தமிழ் வேர்ச்சொல் பெற்றவையேனும் அவைகளைத் தமிழர் எடுத்தாளல் சிறப்பன்று. சவையை எடுத்தாளுவதில் குறைவு இன்று.

**சங்கமே கணைக்கால் ஓரம்**
**சவை சங்கு புலவர் நெற்றி**

என்ற நிகண்டாசிரியர் சவை என்பதை எடுத்தாளல் நோக்குக!

**- குயில், 21.4.1959**

## 45

## மேஷம்

இது மேழகம் என்ற தூய தமிழ்க் காரணப் பெயரின் திரிபு. இவ்வாறு திரித்து மேற்கொண்டனர் ஆரியர்.

**மேழகம் கம்பளம் தகரே திண்ணகம்**
**ஏழகம் கடாதுரு ஆட்டின் ஏறே** - *பிங்கலந்தை 172*

இதில் மேழகம் ஆட்டின் பெயராதலை அறிக! "மே" அல்லது "மேழ்" என்று கத்துதலைக் கொண்டுள்ளதால் மேழகம் என்பது காரணப் பெயர் என்பதை அறிதல் வேண்டும்.

வடவரால் திரிக்கப்பட்டதால் மேஷம் என்பதைத் தமிழர்கள் மேற்கொள்ளுவது சிறப்பில்லை. இதுவே அகரத்* தொகுத்தல் பெற்று மேழம் என்றும் வரும். மேடம் என்றும் வரும். இவைகளையெல்லாம் தள்ளுக! மேழகம் என்பதைமட்டும் கொள்ளுக!

- குயில், **28.4.1959**

---

* ககரத் தொகுத்தல் – என்றிருக்கவேண்டும்

# 46

## சாரீர வீணை

இதில் உள்ள வீணை என்பது வினை என்பதன் திரிபு. இவ்வாறு ஆரியர் திரித்தனர்.இதனைக் கீழ்வரும் தமிழ்ப் பொழில் (துணர் 35; மலர்-1) **இசைப் புலவர் ப. சுந்தரேசன் குடந்தை** எழுதியுள்ள குரல் வினை என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையால் அறிக!

## குரல் வினை

நமது இசைத் தமிழில் பல்வேறு (செய்கைகள்) வினைகள் உண்டு. அவற்றுள் முதன்மையானது குழற் கருவி வினைகள். அடுத்தது யாழ்க் கருவி வினைகள். மூன்றாவது குரல் வினைகள் என்பதாம். இக்குரல் வினைகள், மக்கள் தமது குரல் (சாரீரம்) ஒன்றினால் மட்டும் வினை (பாடுதல்) செய்து தொழில் புரிவது எனப்படும். இவ் வினைகளிலும் பல்வேறு பிரிவுகள் உண்டு.

பாண் என்ற சொல், பாட்டு என்ற பொருளையே சிறப்புறத் தரும். அத் தொழிலைப் புரிபவர் பாணர் எனப் பண்டைய காலத்தில் வழங்கப்பட்டனர். அப் பாணர்களுள்ளும் பெரும் பாணர்கள் எனவும், சிறு பாணர்கள் எனவும் இருவேறு பிரிவினர் இருந்தனராம். இவர்கள் தங்கள் தொழிலுக்கேற்ற வகையில் பேரியாழ்க் கருவியையும், சீறியாழ்க் கருவியையும் வைத்திருந்தனர். பாடற் தொழிலையே தங்களின் குலத் தொழிலாகக் கொண்ட இம் மரபினர் யாவருக்கும், இசைத்தமிழே முதன்மையாகக் கொள்ளக் கிடந்தது. இசைத் தமிழினையொட்டிய இயற்றமிழும், நாடகத்தமிழும் இவர்கள் தொழிலோடு ஒன்றிக் கிடந்தது எனலாம்.

தொழில் முறைகள் எதுவாயினும் அதனைத் தொழிற்படுத்தும் முறைகளை, வினைபுரிதல் அல்லது வினைசெய்தல் எனப்பட்டு, அதனைத் தெளிவாக அச்சொல்லோடு அம் விகுதி சேர்த்து வினையம் எனவும் கூறப்பட்டது. இம்முறையில் குழல்வினை, யாழ்வினை, குரல்வினை எனப்பட்டும் குழல் வினையம், யாழ் வினையம், குரல் வினையம் என வழங்கியிருத்தல் கூடும்.

இவ் வினைகள், குழலாசிரியர்களுக்கும், யாழாசிரியர்களுக்கும் அவரவர்கள் கைக்கொள்ளும் கருவிகளைப் பற்றியே நிகழ்வதாகும். ஆயினும் இசையாசிரியர்களுக்கோ (கண்டப் பாடல்) மிகமிக (ஒரே குரலில்) இன்றியமையாததாக இவ்வினைகள் உணரப்பட்டன. ஏனெனில் - கருவியாளர்கள் யாவரும் தனது கைவிரல்களால் குழற் கருவியில் துளையை அடைத்துவிடுவதால் வினைகள் புரியக்கூடும். யாழ்க்கருவியில் விரல்களால் நரம்புகளைத் தெறிக்கும் முறைமையில் வினைகள் புரியக்கூடும். அத்தகைய எல்லா வினைகளும் ஒருவர் தனது ஒரே குரலினால் (கண்டத்தால்) காட்டுவது என்பது மிகவும் இன்றியமையாததல்லவா? இதனை, மிகப் பழங்காலத் தமிழ்மக்கள் நன்கு நிரம்ப உணர்ந்திருந்தமையினாலேயே, சிலப்பதிகாரத்தில் **இசையாசிரியனமைதி** பகர வந்த நம் இளங்கோவடிகளும்:

> யாழுங் குழலுஞ் சீரு மிடறுந்
> தாழ்குரற் றண்ணுமை யாடலொ டிவற்றின்
> இசைந்த பாடல் இசையுடன் படுத்து
> வரிக்கு மாடற்கு முரிப்பொரு ளியக்கித்
> தேசிகத் திருவி னோசைகடைப் பிடித்து
> தேசிகத் திருவி னோசை யெல்லா
> மாசின் றுணர்ந்த வறிவின னாகிக்
> கவியது குறிப்பு மாடற் றொகுதியும்
> பகுதிப் பாடலுங் கொளுத்துங் காலை
> வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்
> அசையா மரபின் இசையோன்...

எனத் தெளிவு பெறுமாறும், உய்த்துணருமாறும் மிக்க ஆழ்ந்த கருத்தோடு கூறிப் போந்தார்.

இப் பதினொரு அடிகளையும் உணர்ந்த அரும்பத உரைகாரர் கூறுவது.

"யாழ்ப்பாடலும் வங்கியப் பாடலும் இருவகைத் தாளக் கூறுபாடு களும் மிடற்றுப் பாடலும் மந்தமாகிய சுரத்தினையுடைய தண்ணுமை யும், அகக்கூத்தும் புறக்கூத்தும் பதினோராடலென்னுங் கூத்துக்களும் வல்லனாய், இவற்றுடனே சேரச்செய்த உருக்களை இசை கொள்ளும் படியும், இரதம் பொருந்தும்படியும் புணர்க்கவும் வல்லனாய் இருவகைப்பட்ட பாடல்களுக்கும் இயக்கம் நான்கினையு மமைத்துத்

தேசாந்தரங்களிற் பாடைகளையும் அறிந்து, அந்தப் பாடைகள் இசை பூணும் படியையுமறிந்து இயற் புலவனினைவும், நாடகப் புலவன் ஈடும் வரவுகளும், இவற்றுக்கடைத்த பாடல்களும் தம்மிற் சந்திக்குமிடத்துக் குற்றந் தீர்ந்த நூல் வழக்காலே வகுக்கவும் விரிக்கவும் தொகுக்கவும் வல்லவனாயுள்ள இசைப் புலவன்.... என்பதாம்" மேலும் இதனை, "**இது பொழிப்புரை**" எனவும் கூறிவிட்டார்.

இதே பொழிப்புரையை அடியார்க்கு நல்லார் என்பார் அப்படியே எடுத்துக் கொண்டு கையாளுகின்றார். இவர் உரையைப் பதிப்பாசிரியர் பதிப்பிக்குங் காலத்து, **தொகுக்கவும்** என்ற சொல் விடுபட்டுவிட்டது. சிலப்பதிகார முதற்பதிப்பில் அரும்பதவுரையில், **தொகுக்கவும்** என்ற சொல் இருப்பது மிகவும் சிறப்புடையதாகும். நிற்க, சிலப்பதிகாரம் ஆறாம் பதிப்பில் அரும்பத உரையிலும், **தொகுக்கவும்** என்ற இச்சொல்லை விட்டுவிட்டனர். ஆக **தொகுக்கவும்** என்ற முதற்பதிப்புச் சொல் மிகவும் இன்றியமையாததாகும் என்பதனை மட்டும் இங்கே வற்புறுத்துகின்றோம்.

இவ்வாறு சில ஏடுகள் செல்லச் செல்ல **சரீரவீனை** என்ற சொல், அத்துணைப் பொருத்த முடையதாகத் தோன்றாத காலத்தில், மெல்ல '**னை**' என்ற இருசுழி'**னை**'காரம் முச் சுழி '**ணை**' காரமாயிற்று. இப்பொழுது **சரீரவீணை** என்ற அளவிற்கு, ஒரு உடம்பையே வீணையாகக் கொள்ளத்தக்க பொருளில் அமைந்துவிட்டது. என்னே விந்தை! **குரல்விணை** என்ற சொற்களைத் தெளிவுறுத்த வேண்டி எளிய முறையில் அடியார்க்கு நல்லாரால் "**சாரீரவினை**" என்று கூறப்பட்ட பகுதி, "**சரீரவீணை**" என்று மாறுபாடு கொண்டது. சில ஏடுகளில் மட்டுமே இம் மாறுபாடு இருந்து வந்ததால் (அல்லது ஒரு ஏட்டுப் பிரதியில் மட்டும் இவ்வாறு இருந்திருக்க கூடும்) பதிப்பித்த ஐயரவர்கள் இதனை விடாது "**சரீரவீணை** என்றும் பிரதிபேதமுண்டு" என உடுக் குறியிட்டு எடுத்துக் காட்டினார்கள். இவ்வாறு பிரதிபேதம் காட்டினமையினாலே நாம் ஓர் ஒப்பற்ற உண்மையை நன்கு சிந்தித்து உணரமுடிந்தது. இஃதிவ்வாறிருக்க சிலப்பதிகார ஆறாம் பதிப்பில் **சாரீரவினை** என்ற மூலத்தையே **சாரீரவீணை**யாகப் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இத்தகைய சிறு பகுதிகள் யாவும் நன்கு ஊன்றி உணரப் படாது வருவதும் நம் பண்டைய தமிழின்னீர்மை கெடுவதற்கு வழிகோலிவிடுவதாகின்றது.

ஆக, குரல் வினை படாத பாடுபட்டு ஓரளவு தனது பழமையையும் திரிபையும் காட்டி ஒட்டிக் கொண்டிருப்பதனை நாமும் ஓரளவு உணர்வோமாக!

குரல்வினை என்ற சாரீர வினை என்பது, மிகப் பழைய காலத்தும் வாய்ப்பாட்டினையே குறித்ததாகும். வாய்ப்பாட்டு பகுதிகள் பல உண்டு. அவற்றைப் பொதுவாகக் கண்டப்பாடல் எனக் குறிப்பதும் பண்டைய வழக்கே. இவ்வழக்கு சிறப்பாகக் குரலினால் (செய்யப்படும்) புரியப்படும் வினைவகையில் ஆளத்தி முறையையே குறிக்கப்படுவ தாயிற்று (இதன் பகுதிகள் யாவும் நாம் எழுதும் "**ஆளத்தி**", என்னும் கட்டுரையில் விரிவாகக் காணலாம்.)

நிற்க, இப் பகுதிகளில் வரும் சீரிய தமிழ்ச் சொல்லாம் '**மிடறும்**' என்ற இளங்கோவடிகளின் சொல்லிற்கு, வாய்ப்பாட்டு என்று இக்காலம் பொருள் கொள்ளக் கிடக்கின்றது. இவ்வாய்ப்பாட்டு வினைதான் "குரல்வினை" எனக் கூறப்பட்டது.

இச்சொல்லிற்கு அரும்பதவுரைகாரர் "மிடறுமென்றது, மூலாதாரந் தொடங்கிய மூச்சைக் காலாற் கிளப்பிக் கருத்தாலியக்கி, ஒன்றெனத் தாக்கி, இரண்டெனப் பகுத்துப் பண்ணீர்மைகளைப் பிறப்பிக்கப்பட்ட பாடலியலுக்கு அமைந்த மிடற்றுப் பாடலுமென்றவாறு" என ஆழ்ந்ததொரு பொருளினை விளக்கித் தந்தருளினார்.

அடியார்க்கு நல்லாரே "**மிடறுமென்பது சாரீர வினையுமென்ற வாறு**" எனக் குறித்தார். **சாரீரம்** என்றால் **குரல்** என்பது இக்கால மக்களும் நன்கறிந்தேயுள்ளனர். **குரல்வினை** என்ற சொல்லின் பகுதியினை நன்கு சிந்தித்துணர்ந்த அடியார்க்குநல்லார், ஏழிலிசைகளில் '**குரல்**' என்னும் இசையொன்று உள்ளதையும் உள்ளத்திற்கொண்டு, **குரல் வினை** எனக் கூறினால், அது குரல் என்ற இசைக்குரிய ஏதோ ஒரு வினையாகக் கருதிவிடாதிருக்க வேண்டி குரல் என்பதனை, இடத்திற் கேற்றவாறு **சாரீரம்** எனத் தெளிவுபடுத்துவான் வேண்டி, இவ்விடத்தில் குரல்வினை என்பதைச் **சாரீரவினை** எனக் கூறிவைத்தார்.

சாரீரவினை என்ற இச்சொல்லும் ஏடெழுதுவோரால் 'சா' வன்னா 'ச' னாவாகி 'வி' னா 'வீ' யன்னாவாகி "னை" யன்னா "ணை" யன்னாவாகி, நாளடைவில் **சாரீரவினை சரீரவீணை** ஆயிற்று. அதாவது சாரீர வினை என்ற சொற்களின் முதலெழுத்து 'சா' என்ற நெடில், குறிலாக 'ச' ஆனால் **சரீரவினை**யாகும். பின் வி என்ற குறில் நெடிலாக 'வீ' என மாறினால் **சரீரவீணை** ஆகும்.

- **குயில், 5.5.1959**

CENTER FOR BHARATHIDA...
005331
LIBRARY
BHARATHIDASAN UNIVERS...

## 47

சென்ற குயிலிதழில் சாரீரவீணை பற்றிய விளக்கம் நீண்டு விட்டது என்று படிப்போர் எண்ணியிருப்பார்கள்; அப்படி அன்று!

சமஸ்கிருதத்தினின்றே தமிழ் வந்தது, சமஸ்கிருதச் சொல் இல்லாத தமிழ் நூலே கிடையாது என்றும் பலவாறு புளுகும் புளுகுக் குட்டையில் விழாத தமிழர்கள் இல்லை எனும்படி இருக்கிறது நிலைமை!

அவர்களை - அப்படிப்பட்ட தமிழர்களைத் "தமிழின்றேல் ஆரியமில்லை" என்னும் அறிவுக் கரையேற்றுவது பெருந்தொல்லை தருவதாய் உள்ளது.

சென்ற குயிலிதழில் சாரீரவீணை விளக்கத்தால், தமிழ்ச் சொல்லை வடசொல்லாக்கும் முடிச்சுமாறித்தனத்தில், எத்தனை பார்ப்பனர்கள், எவ்வளவு சுறுசுறுப்பாய் வேலை செய்கின்றார்கள் என்பதைக் காட்ட முடிந்தது. குரல் வினை சாரீரவிணை ஆயிற்று. அவ்வளவு இடம் கிடைத்தால் போதாதா? வினையை வீணையாக்கி விட்டார்கள்.

இது போலத்தானே எல்லாம்?

பிச்சை எடுக்கவந்தவன் கச்சையில் இலக்கம் பொன்னிருந்தது என்றால் எவர் ஒப்புவார்? தமிழகத்தில் ஏதுங்கெட்டுப் புகுந்த ஓர் லம்பாடி கூட்டத்திற்கு இலக்கியமும் ஒரு கேடா? மொழியும் ஒரு கேடா? அவர்கள் சொல்வதைக் கேளுங்கள்; எங்கள் சமஸ்கிருதத்தினின்று தான் தமிழ் வந்தது. இதை நம்பலாமா தமிழர்கள்? பல்காலும் புளுகினால் இல்லதை உண்டு என்று ஆக்கினான் கோயபல்ஸ் என்பர்: அவர் அறியார் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே இந்தப் பாழான நாட்டில் நிறைய கோயபல்சுகள் இருந்தார்கள் - இருக்கின்றார்கள்.

### தூரம்

இது ந்தூர என்னும் வடசொல்லின் சிதைவென்று கூறுவர் வடவர். உனாதி சூத்திரக்காரர் இது 'இ' என்னும் அடியினின்று பிறந்ததென்று

கூறிப் பிழைத்தார். உண்மையில் அது துலை என்ற நம் தமிழடியையே அடியாகக் கொண்டு தோன்றிய தூய தமிழ்க் காரணப் பெயர்; சேய்மையைக் குறிப்பது. (விரிவைச் சென்ற குயிலிதழ் இதழ் தலையங்கத்தில் காண்க.) (5.5.1959 இதழ் தலையங்கம், தொன்மை ஆராய்ச்சி IV)

## காட்டம்

இது காஷ்டம் என்ற வடசொல்லின் சிதைவு என்பர். காட்டம் விறகுக்குப் பெயர். காட்டுப் பொருள் காட்டம் எனக் காரணங் காண்க. இதன் வேர்ச் சொல் காடு என்பது. இது போலவே.

## கோட்டம்

என்பது கோஷ்டம் என்ற வடசொற் சிதைவென்பர். கோளுதல், கோடுதல், கோட்டம் அனைத்தும் ஒரே அடியிற் பிறந்த தூய தமிழ்க் காரணப் பெயர்கள். கொட்டம் என்பது இதையே சார்ந்தது.

**- குயில், 12.5.1959**

# 48

## கூகம், கூகை

இதனை கூஹம் என்ற வடசொல்லின் சிதைவென்றார் ஐயங்கார் தம் சடாயு காண்ட உரையில்!

இது தூய தமிழ்க் காரணப் பெயரே, கூ கூ என்ற ஒலிக் குறிப்பின் அடிப்படையாகப் பிறந்தது. 'காகா' என்று கத்துவதால் காகம் ஆனது போல, சலசல என்று பாய்வதால் சலம் ஆனது போல. கூகை - கோட்டான்.

## கலுழன்

இது கருடன் என்ற வடசொல்லால் வந்தது என்றார் மேற்படியார். கலுழன் என்பது தூய தமிழ்க் காரணப் பெயராதலை அவர் மறைக்க ஆசைப்படுகின்றார்.

கலுழ்தல் கண்ணீர் கசிவதெனக் கொள்க! கலுழன் - கருடன், கண்கலங்கிய வண்ணம் தோற்றமளிக்கக் காணலாம்.

கலுழன் என்ற தமிழ்ச் சொல்லையே கருடன் எனச் சொல்வறிய ராகிய வந்தவர் எடுத்தாண்டார் என அறிதல் வேண்டும்.

## இராகு

இதை ராஹு என்ற வடசொல்லின் சிதைவென்று புரட்டுப் பேசுவர் வடவர். ரா, அர, அரவு இம் மூன்றும் பாம்புக்குப் பெயர், தமிழில், இவற்றில் அரா என்றதையே ராஹு என்று சிதைத்து எடுத்தாண் டார்கள் வடவர் என்பதில் எவர்க்கும் ஐயப்பாடு இருந்திராது.

இராகு வந்தவர் மொழியன்று; செந்தமிழ்ச் சொல்லே.

**- குயில், 19.5.1959**

## 49

### அகளம்

இச் சொல்லொலி கேட்ட அளவிலே இதை வடசொல் என்று தமிழரே நம்பிவிடுகின்றன)ர். அந்தப் பேதமையைப் பயன்படுத்திக் கொண்டு வடவர் இதை வடசொல் என்று உறுதிப்படுத்துகின்றனர்.

அகலம் என்ற தூய தமிழ்க் காரணப் பெயரின் திரிபே அகளம் என்பதாகும்.

அகளம் - அகலம் என்ற சொல்லுக்கு மிடா (திவாகரம்) என்பதும் நீர்ச்சால் (மலை படு கடாம் - 104) என்பதும் யாழில் பத்தல் (சிறுபாணாற்றுப் படை 224 ) என்பதும் பொருளாகும்.

### அங்கம்

இது வட சொல்லன்று. அசை + அம் திரண்டு நீண்டது. உறுப்பு (பிங்கலந்தை) உடம்புக்கும் பெயர். (கம்பராமாயணம் தாடகை 2) மரத்துக்கு உதவியாய் அமைந்த கிளைக்கும் பெயர்.

### அங்கி

பிங்கலந்தை அங்கி, நெருப்பு என்னும்! கந்தபுராணம் (பாயிரம் 13) அக்கினி தேவன் என்னும்! திருக்காளத்திப் புராணம் (30 - 14) சூரியன் என்னும்! பரிபாடல் கார்த்திகை நட்சத்திரம் என்னும்! இத்தனைப் பொருள் அமைந்தது அங்கி என்பது, அஃகு + இ என ஆய்தம் மெல்லினமாகிப் புணர்ந்த தூய தமிழ்ப்பெயரே என அறிதல் வேண்டும். இதை வடசொல் என்று ஏமாற்றுவர். அஃதல் - விரிதல்.

அங்கத்தையுடையது அங்கி என்னும்போது நீண்ட சட்டையை யும் குறிக்கும். இது அங்கிகை என வந்து பெண்களின் மார்பின் சட்டை (இரவுக்கை, ஜாக்கெட்) யையும் குறிக்கும்.

## அங்குடம்

இது திறவுகோலுக்குப் பெயர். வடசொல் என்று கூறி ஏமாற்றி வருகின்றார்கள். வடவர். 'அங்குசம்' என்பதன் திரிபே. எனவே அங்குடம் என்பது தூயத் தமிழ்க் காரணப் பெயர்.

## அங்குரம்

இது தூய தமிழ்க் காரணப்பெயர். அஃகு + உரவம். உரவம் - கூடு, கொத்து, அங்குரவம், அங்குரமானது தொகுத்தல் முனை என்பது பொருள். இதையும் வடசொல் என்று பிதற்றுவர் வடவர். பெரிய புராணம் திருஞானசம்பந்தர் (53) பார்க்க. இந்த அங்குரம் என்பது மற்றும் திரிந்து அங்குலம் என வரும். விரல் அகலம் என்பதே இதன் பொருள்.

## அசடு

கம்பராமாயணம் பார்ப்பனர் உரையில் சடு - அறிவுடமை, அசடு - அறியாமை என்று பொருள் கூறி, இது வடசொல் என்று புளுகி வைத்தார். அசடு என்ற சொல் அயறு, அசறு என்பதன் திரிபு ஆதலால் தூய தமிழ்ச் சொல்லாதல் பெறப்படும்.

## அடவி

இது வடசொல்லன்று. அடர்வி என்பதன் இடைக் குறையாய் அடர்தல் எனப் பொருள் தருவது. ஆகுபெயர் அடவி - சோலை, கூட்டம்.

**- குயில், 26.5.1959**

## 50

### அம்பரம்

ஆடைக்கும், வானுக்கும், திசைக்கும், கடலுக்கும், மன்றத்துக்கும், துயிலிடத்திற்கும், உதட்டுக்கும் பெயராகிய அம்பரம் என்பது தூய தமிழ்க் காரணப் பெயர்.

அம்முவது என்றால் சூழ்ந்திருப்பது. அரம் உறுவது என்ற பொருள்பட்டு வருவதோர் கடைநிலை. இடையில் 'ப்' விரித்தல். இந்தக் கடைநிலை 'ப' கரத்தையும் இழுத்துக் கொண்டு (பரம்) கடை நிலையாய் வருவதும் உண்டு. விளம்பரம் என்பதிற் காண்க. எனவே அம்பரம் சூழ்ந்திருப்பது. ஆடை உடலைச் சூழ்ந்திருப்பது காண்க. ஆகாசம் - உலகைச் சூழ்ந்திருப்பது காண்க. திசையும் அவ்வாறே. கடலும் அவ்வாறே. மன்றம் அமைந்திருப்பாரைச் சூழ்ந்திருப்பது காண்க! துயிலிடமும் அவ்வாறே! உதடு உள்வாயைச் சூழ்ந்திருத்தல் காண்க!

இவ் வம்பரமே அம்பலம் என வேறுபட்டு வரும்.

### அம்பா

என்பதும் வடசொல் என எண்ணா தொழிக! அம்மா என்பதின் திரிபே அம்பா. பரிபாடல் "ச. 11.81-ல்" அம்பா வருகின்றது. இஃது அம்மை என்றும் வருவதுண்டு.

### அம்மன்

அம்மன் என்பதும் தூய தமிழ்ச் சொல்லே. அம்மனை என்பதன் கடைநிலை கெட்டது.

## அமர்

இது வட சொல்லன்று.

அமர் - போர், போர்க்களம் (புறப். வெண். மா. 85) விருப்பம் (அகம் 23) கோட்டை மதில் எனப் பல பொருள் குறிக்கும் ஒரு சொல் என அறிக! போர்வீரர் என்பது பொருள். விருப்பமுடையவர் என்ற காரணம் கூறித் தேவர்க்குப் பெயராக எடுத்தாண்டனர் வட மொழியாளர்.

**- *குயில்*, 2.6.1959**